முருகப்பெருமான் துணை

**மகான் வியாக்ரமர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.06.2022, சனிக்கிழமை

1. மாதரும ராஜனே அரங்கனே
மண்ணுலகை மீட்க வந்த
சதாசிவன் மைந்தன் வடிவான
சடாட்சரனே சற்குரு நாதனே
2. நாதனே உன் பெருமை கூறி
ஞாலமதில் சுபகிருது மிதுனதிங்கள்
வேத திகதி காரிவாரம் தன்னில்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 04 நாள், 18.06.2022 சனிக்கிழமை)
விளம்பிட அருளாசி தன்னை
3. தன்னையே வியாக்ரமர் யானும்
தரணியே நலம் காணஉரைப்பேன்
அண்ணலாக ஞானதேசிகனார் தரும்
அருளுபதேசங்களை ஏற்றுவர
4. வருகவே உலகினில் மாற்றம்
வளர்ச்சி தரும் வண்ணம்
குருவருள் பலமாக தெய்வபலமாக
குவலயமே ஆற்றல் காணும்
5. காணவே ஞானமார்க்கமெனும்
கந்த வேலன் தயவான வழியை
ஞானமாக வேதமாக ஏற்று
நம்பிக்கை வைத்து வருதலுற
6. வருகவே ஞானபலம் கூடி
வள்ளல் தன்மையும் மாற்றமும்
தருமம் தொடர்ந்து செய்கின்ற
தனித்துவமும் தன்னார்வமும் பெருகும்
7. பெருகவே அவரவர் தேவைக்கு
பொருளாதார வளம் கூடி
ஆறுதலும் நல்ல மாறுதலும்
அவரவர்க்கும் வந்தடையும்
8. அடையவே எந்தச் சூழலிலும்
அநீதி புரியா உயர் மக்களாக
தடைகள் இல்லா மேன்மக்களாக
தரணியோர் உயர்ந்து நிற்பர்
9. நிற்கவே சேவைபல ஆற்றி
நிலமதனில் பொது சபைகள்தனில்
அற்புதமான ஞானவான்கள் ஆக
ஆறுமுகனார் வழிபாட்டை செய்து

10. செய்துமே சித்திகள் பலவற்றை
சூட்சும வடிவினில் அடைந்து
மெய்ஞானவான்கள் ஆகியே
மேலவர்கள் ஆசிபட வாழ்வர்

11. வாழ்வினில் ஞானிகள் ஆகி
வையகம் தனில் ஞான ஆட்சி
தாழ்விலா ஆறுமுகன் தலைமையில்
தரணியோர் அமைத்து சிறப்பர்

அருளாசி முற்றே

–சுபம்–